Tamil: The Role of Carers

# தமிழ்: பேணுநர்களுடைய பொறுப்பு

பராயமடையாத அகதித் திட்டத்திற்குரிய (Refugee Minor Program, (RMP)) வாடிக்கையாளர்கள் பெற்றோர்களுடன் வசிப்பதில்லை என முடிவு செய்யப்பட்டதற்கு இணங்க எமது வாடிக்கையாளர் குழுவின் உடல் நலம் மற்றும் நல் வாழ்வு சம்பந்தமாக பேணுநர்களின் பொறுப்பு மிகவும் முக்கியமானது.

கீழே குறிக்கப்பட்டவர்களை, பேணுநர்கள் உட்கொண்டிருக்கின்றது:

- விரிவுபட்ட குடும்பம்,தொடர்புடைய கலாச்சார சமூகத்தின் அங்கத்தவர்கள், நண்பர்கள்,குழந்தைகள் அல்லது இள வயதினருக்குத் தெரிந்தவர்கள் ஆகியோர் உள்ளடங்கிய உறவினர் வலையமைப்பு (kinship networks)
- வளர்ப்புப் பேணுநர்கள் (foster carers) உள்ளடங்கலாக மாற்று பேணுநர்கள் (alternative carers)

காப்புள்ள வாடிக்கையாளர்களுடன் (non-ward clients) RMP க்கு உள்ள ஈடுபாடு, எந்த ஒரு கலாச்சாரத்திலுள்ள குழந்தைகளும் அவர்களுடைய பெற்றோர்களால் நன்கு பராமரிக்கபடுவார்கள் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆனால் இது சாத்தியமில்லை என்ற போது, அதே கலாசாரத்தைக் கொண்டுள்ள நெருங்கிய உறவினர்களால் சிறந்த முறையில் பேணப்படுகிறார்கள். காப்புள்ள குழந்தைகளுடனான RMP யின் வேலை இயன்றளவு குழந்தையோ இளையவரோ உறவினர்களின் பராமரிப்பில் இருப்பதையே குறி வைக்கின்றது . பொதுவாக உறவினர் அதே கலாச்சாராத்தைக் கொண்டுள்ளவராகயிருப்பார், ஒரே மொழியைப் பேசுபவராகயிருப்பார் மற்றும் குழந்தையின் அல்லது இளம் வயதினர் குடும்ப வரலாற்றைத் தெரிந்தவராகயிருப்பார். அநேகமாக குழந்தையால் அல்லது இளம் வயதினரால் அனுபவிக்கப்படும் அதே அகதி அனுபவத்தை அவரும் கொண்டிருப்பார்.